**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் தைத் திங்கள் 26–ம் நாள்
2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் திங்கட்கிழமை

******

**அசல் வழக்கு எண். 41/2024–ல் இடைமனு எண்.02/2024–ல்**
**இடைமனு எண்.04/2025**

ஜெயராமன் ...மனுதாரர்/பிரதிவாதி

...எதிர்....

செந்தமிழ்செல்வன் ...எதிர்மனுதார்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 02.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. நன்மாறன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் சொல்லியுள்ள முக்கிய ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டி, மனுதாரரால் இம்மனு உ.வி.மு.ச கட்டளை 8 விதி 1 (அ) (3)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/பிரதிவாதி மீது எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்து குறித்து உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் மனுதாரர் எதிருரை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:00:54 +0530

தாக்கல் செய்தபோது மனுவில் சொல்லியுள்ள ஆவணங்கள் அவரிடம் இல்லை என்றும், தற்போது மேற்படி ஆவணங்களை கண்டுபிடித்து தாக்கல் செய்வதாகவும்,

**(1.2)** இந்த காலதாமதம் வேண்டுமென்றோ அல்லது அலட்சியத்தாலோ ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனுதாரர் தரப்பு ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடுசெய்யமுடியாத கஷ்டமும் நஷ்டமும் எற்படக்கூடும் என்றும்,

**(1.3)** எனவே, மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யபப்ட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைக் குறிப்பாணையின் சுருக்கம்**

**(2.1)** மேற்படி வழக்கில் மனுதார் தாக்கல் செய்த 1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பு இல்லாத ஆவணங்கள் என்றும், 15.05.1980 தேதியிட்ட போக்கிய பத்திரம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் சட்டப்படி செல்லத்தக்கதும், ஏற்கத்தக்கதும் அல்ல என்றும், ஆவண எண்கள் 5,6 முறையே 08.03.1982, 08.10.1988 தேதியிட்ட கிரய உடன்படிக்கைகள் காலாவதியான ஆவணங்கள் என்றும்,

**(2.2)** மேற்படி 7வது ஆவணமான சீலிங்தொகை செலுத்திய ரசீதுகள் இந்த வழக்கில் தேவையற்ற ஆவணங்கள் என்றும், 9 முதல் 11 வரையான சிட்டா அடங்கல் ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளதால் அவை செல்லதக்கதல்ல என்றும்,

**(2.3)** 12, 13 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக பிரதிவாதியால் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் ஆட்சேபனைக் குறிப்பானை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:01:00 +0530

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

3. மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/பிரதிவாதி மற்றும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) **மனுதாரர்/பிரதிவாதி தரப்பில்** அசல் வழக்கில் இந்த மனுதாரர்/பிரதிவாதியானவர் எதிருரை தாக்கல் செய்போது, சில ஆவணங்கள் இல்லாததால், தற்போது மிகவும் சிரமப்பட்டு, அந்த ஆவணங்களை கண்டுபிடித்து தாக்கல் செய்வதாகவும், எனவே, காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும், ஏற்படும் என்றும் வாதிடப்பட்டது.

(iii) **எதிர்மனுதாரர்/வாதி தரப்பில்** மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாதவை என்றும், போக்கிய பத்திரம் பதிவு செய்யப்படாததால் செல்லத்தக்கதல்ல என்றும், கிரய உடன்படிக்கை ஆவணங்கள் காலாவதியான ஆவணங்கள் என்றும், கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ள சிட்டா, அடங்கல் செல்லத்தக்கதல்ல என்றும், 12,13 ஆவணங்கள் வழக்கிற்காக மனுதாரர்/பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டவை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(iv) மனுதாரர் தரப்பில் சில ஆவணங்கள் எதிருரை தாக்கல் செய்தபோது, கிடைக்காததாலும், தற்போது மிகுந்த சிரமத்திற்கிடையே கிடைக்கப்பட்டுள்ளதால் அவற்றை ஏற்று, காலதாமதத்தை மன்னித்து மனுதாரர்/பிரதிவாதி தரப்பில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:01:08 +0530

குறியீடு செய்ய வேண்டும் என்பது மனுதாரர் தரப்பு வாதமாகும். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றும், பதிவு செய்யப்படாத, காலாவதியான ஆவணங்கள் மற்றும் மனுதாரர் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது எதிர்மனுதாரரின் வாதமாகும்.

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் எந்தெந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கவனமாக பரிசீலனை செய்தபோது, மனுவில் கூறியுள்ளவாறு வரிசை எண்.**1,2,3,5,6,7** ஆவணங்கள் **ஏற்றுக்கொள்ளக்கூடியதாக** உள்ளது. வரிசை எண்.4ல் உள்ள ஆவணம் பதிவு செய்யப்படவில்லை, வரிசை எண்.8,12,13 ஆகிய ஆவணங்கள் நகல்கள், வரிசை எண்.9,10,11 ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது, எனவே, வரிசை எண்.**4,8,9,10,11,12,13** ஆவணங்கள் **ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல** என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

இம்மனுவை பகுதியாக அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு வழக்கை நடத்துவதற்கு வாய்ப்பு அளித்து அதன் பின்னர் வழக்கில் தீர்வு காண்பதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு **பகுதியாக** அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மையை கருதி இம்மனுவில் இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவர்வர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுவில் உள்ள வரிசை எண். 1,2,3,5,6,7 ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டும்,**



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:01:17 +0530

**வரிசை எண்.4,8,9,10,11,12,13 ஆவணங்களை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:01:24 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.02.09 17:01:30 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>நேரிய/வரைவு உத்தரவு</u>**
அசல் வழக்கு எண்.41/2024ல்
இடைமனு எண்.04/2025
நாள் 09.02.2026